## இந்திய அரசு
## தொழிலாளர் அமைச்சகம்
## LWO, கிண்டி, சென்னை - 600 032

### NSP – பீடி/Cine தொழிலாளர் கல்வி உதவித்தொகைத் திட்டம் –2026-27

அனைத்து கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் / தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள் தங்களது கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களிடையே பீடி/Cine தொழிலாளர் கல்வி உதவித்தொகைத் திட்டம் தொடர்பான தகவல்களை தெரிவித்து, அவர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் (National Scholarship Portal – NSP) மூலம் 01.06.2026 முதல் AY 2026-27 ஆண்டுக்கான Scholarship பெற விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

துவக்க பள்ளிகள், பெற்றோர்-ஆசிரியர் கழக (PTA) கூட்டங்கள் மற்றும் பெற்றோர் வாட்ஸ்அப் குழுக்கள் மூலமாக இத்திட்டம் தொடர்பான தகவல்களை பெற்றோருக்கு எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 1-12 வகுப்பு & அனைத்து கல்லூரி பயிலும் (Arts/Science/ITI/Polytechnic/Engineering/Medical/Nursing,etc.,) மாணவர்களுக்கு ரூ.1,000/- முதல் ரூ.25,000/- வரை கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பீடி/Cine தொழிலாளர்களின் பிள்ளைகள் தங்களது கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை **National Scholarship Portal – (NSP)** மூலம் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### புதிய மாணவர்கள் விண்ணப்பிக்கும் நடைமுறை

**NSP இணையதள இணைப்பு:** https://scholarships.gov.in/

1. **ஒருமுறை பதிவு (OTR) உருவாக்குதல்**
   மாணவர்கள் முதலில் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (NSP) ஆதார் எண்ணைப் பயன்படுத்தி ஒருமுறை பதிவை (One-Time Registration - OTR) மேற்கொள்ள வேண்டும். பதிவு நிறைவடைந்தவுடன் OTR எண் உருவாக்கப்படும். இவ் OTR எண் மாணவரின் பின்தொடர் கல்வியாண்டுகளுக்கும் செல்லுபடியாகும்.

2. **NSP இணையதளத்தில் உள்நுழைதல்**
   OTR எண் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி NSP இணைய தளத்தில் உள்நுழைய வேண்டும். பின்னர், பீடி/Cine தொழிலாளர் கல்வி உதவித்தொகைத் திட்டத்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

3. **விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்தல்**
   மாணவர்களின் விவரங்கள், கல்வி நிறுவனங்களின் விவரங்கள், பெற்றோர் அல்லது பாதுகாவலர் விவரங்கள், மற்றும் வங்கி கணக்கு விவரங்கள் ஆகியவற்றை கொண்டு விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யதல் வேண்டும்.

4. **ஆவணங்களை பதிவேற்றம் செய்தல்**
   மாணவர்களின் ஆதார் அட்டை, வங்கி கணக்குப் புத்தகத்தின் நகல், பீடி/Cine தொழிலாளர் அடையாள அட்டை மற்றும் வருமானச் சான்றிதழ் ஆகியவற்றை பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

5. **விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**
   அனைத்து விவரங்களையும் சரிபார்த்த பின்னர் விண்ணப்பத்தை இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

### விண்ணப்பங்களை புதுப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்

கடந்த வருடம் உதவித்தொகை பெற்ற மாணவர்கள் (Renewal) தங்களது முந்தைய உள்நுழைவு விவரங்களைப் பயன்படுத்தி National Scholarship Portal – (NSP) உள் நுழைந்து, கல்வி தொடர்பான விவரங்கள், வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் வருமானச் சான்றிதழ் ஆவணங்களைப் புதுப்பித்து, இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கலாம்.

### உதவி மற்றும் விளக்கங்கள்

கல்வி உதவித்தொகை விண்ணப்ப செயல்முறை தொடர்பாக ஏதேனும் விளக்கம் அல்லது உதவி தேவைப்பட்டால், விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட அலுவலர்களை தொடர்புகொள்ளலாம்:

1. கல்வி நிறுவன முனைய அலுவலர் (Institute Nodal Officer)
2. அருகிலுள்ள பீடி/Cine தொழிலாளர் மருத்துவ மையம் (Beedi/Cine Dispensary)
3. தொழிலாளர் அமைச்சகம், சென்னை மண்டலம் (Labour Welfare Organisation, Chennai Region)
   ***e-mail:* nsp-lwo.chennai@zohomail.in**

**திரு மணிகண்டன் N, CLS,**
மத்திய நல ஆணையர்,
தொழிலாளர் அமைச்சகம்
LWO, கிண்டி, சென்னை - 600 032

Details of Scholarship amount:

| Sl.No | Class / Category | Scholarship amount (both male / female) |
|---|---|---|
| 1 | I - IV | 1000 |
| 2 | V - VIII | 1500 |
| 3 | IX & X | 2000 |
| 4 | XI & XII | 3000 |
| 5 | ITI, Polytechnic | 6000 |
| 6 | Degree Courses (B.sc, BA, etc,.) | 6000 |
| 7 | Professional courses (BE, MBBS, etc, ) | 25,000 |

New rule update (Effective from the current Academic year):

1. Students who are receiving one or more other welfare based scholarship scheme and one merit based scholarship are also eligible to apply and avail the benefits of Beedi workers welfare scholarship.
2. Students who are having joint bank account, the first name should be of student.
3. Where more than one child from the same worker's family applies, each student must provide a separate bank account number and separate mobile number.